**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No : 44 of 2024

DATE : 17.07.2025

Depositions of witness for Prosecution

PW:2

| Name | பாலமுருகன் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | நல்லகண்ணு | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of July 2025

**(3 வது எதிரி ஆஜர். 2, 4, 5 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் புதுப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். கடந்த 12.01.2015 அன்று காலை 11 மணி அளவில் கௌரி என்பவர் வீட்டிற்கு முன்பு நானும் ராகவன் என்பவரும் நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது போலீசார்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் ராகவன் என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜாரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

கௌரி என்பவரது வீடு எந்த தெருவில் உள்ளது என்றால் மன்னர் தெற்கு தெருவில் உள்ளது. அவரின் வீடு எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் கிழக்கு திசையை நோக்கி உள்ளது. எனக்கு அதே தெருவில் தான் வீடு உள்ளதா என்றால் அந்த தெருவில் தான் வீடு உள்ளது. நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை : –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல
நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு
என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால்
சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால்
ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு